# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100, அண்ணா சாலை, சென்னை –600 032.
தொலைபேசி: 044–22201337/நிகரி எண்.22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in
இணையதள முகவரி: www.tnlbo.tn.gov.in

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை–600 032
முன்னிலை: முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப, (ஓ),
*************

முறையீட்டு மனு எண்: 0121/2016/நகராட்சி

ஆணை எண்: 55/2017

நாள்: 27/03/2017

திரு. சுப. நாகராஜன்,
11/7, முத்துராமலிங்கசாமி கோவில் மேற்கு தெரு,
வெளிப்பட்டணம், இராமநாதபுரம். – முறையீட்டு மனுதாரர்

நகராட்சி ஆணையர்,
இராமநாதபுரம் நகராட்சி. – எதிர் மனுதாரர்

## ஆணை

முறையீட்டு மனுதாரரது 23.06.2015 நாளிட்ட மனு ஒன்று 25.06.2015 அன்று இம்முறைமன்ற நடுவத்திற்கு வரப்பெற்றது. மேற்படி மனுவில் கீழ்க்கண்டவாறான புகார்கள்/குற்றச்சாட்டுகள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன:-

(1) இராமநாதபுரம் நகராட்சியில் 17.08.2012ம் தேதி நகர்மன்ற தலைவரால் நகர்மன்றத்தில் தனி நபர் தீர்மானமாக பொய்யான தகவல்களுடன் பழைய ஆட்டி சாலையை வேறு பயன்பாட்டுக்கு கொண்டுவர அலுவலக குறிப்பு இன்றி எதிர்ப்புகள் பதிவு செய்யாமல் தீர்மானிக்கப்பட்டது.

(2) ரூ.5 கோடி மதிப்புள்ள அரசு சொத்தை மற்றும் 1000 சதுரடி பரப்பளவு கொண்ட கட்டிடத்தை தனியாருக்கு மாத வாடகைக்கு குத்தகைக்கு விடும் நிலையில் சட்டத்திற்குட்பட்டு பத்திரிக்கைகளில் விளம்பரம் மற்றும் அனைத்து அலுவலக பலகைகளில் அறிவிப்பை ஒட்டாமல், அனைத்து கவுன்சிலர்களுக்கும் அறிவிப்பு அறிக்கை கொடுக்காமல் ரகசியமாக ஒப்பந்தப்புள்ளி மற்றும் பொது ஏலம் நடத்தியது.

(3) அரசு கட்டிடத்தை தனியாருக்கு பொது ஏலத்தின் மூலம் மாத வாடகைக்கு குத்தகைக்கு விட வேண்டுமென்றால் பொதுப்பணித் துறையின் மூலம் மாதவாடகை நிர்ணயம் செய்து பெற்று அதன் அடிப்படையில் தான் பொது ஏலத் தொகையை குறைந்தபட்சம் நிர்ணயம் செய்யப்பட வேண்டுமென்பது மீறப்பட்டுள்ளது.

(4) 4.4.2013 மற்றும் 5.6.2013 ஆகிய இரு தேதிக்குமிடையே 60 நாட்களுக்கு மேல் இடைவெளி இருந்தும் சட்டவிதிகளுக்குட்பட்டு ஒப்பந்தப்புள்ளி மற்றும் பொது ஏலம் நடத்த ஆணையாளர் முயற்சிக்காதது.

(5) 5.6.2013ம் தேதி நடைபெற்ற பொது ஏலத்தில் மட்டும் இரண்டு நபர்கள் கலந்து கொண்டதில் சரவணன், த/பெ. திரவியம் என்பவர் ரூ.10,700/-க்கு ஏலம் கேட்டது மட்டும் மன்றத்தில் அலுவலக குறிப்பு வைக்கப்பட்டுள்ளது. இன்னொரு நபரைப் பற்றி எதுவும் தெரிவிக்கப்படவில்லை.

(6) தனியாருக்கு ஏலம் விடப்பட்ட பழைய ஆடு சாலையில் நடைபெற்றுவரும் நாய்கள் தங்குமிடம் மற்றும் அறுவை சிகிச்சை அறைக்கு பதிலாக புதிய நவீன ஆடு சாலைக்கு அருகில் புதிதாக கட்டப்படும் நாய்கள் தங்குமிடம் மற்றும் அறுவை சிகிச்சைக்கூடம் கட்டி முடிக்கப்பட்டு பயன்பாட்டுக்கு வரும் நாளன்று டி. சரவணன், த/பெ. திரு. திரவியம், தேவிபட்டணம் ரோடு அவர்களிடம் ஒப்படைக்க வேண்டும் என்று அலுவலகத்தின் மூலம் மன்றத்திற்கு தெரிவிக்கப்பட்டுள்ளது. இன்றுவரை நாய்கள் தங்குமிடம், அறுவைச் சிகிச்சைக் கூடம் கட்டி முடிக்கப்படவில்லை. ஆனால், கட்டிடத்தை ஏலம் எடுத்த திரு. டி. சரவணன், த/பெ. திரு. திரவியம் என்பவர் கட்டிடத்தை தன்னிடம் ஒப்படைக்கக்கோரி ஆணையாளர் மீது உயர் நீதிமன்ற மதுரைக் கிளையில் W.P.(MD) எண்.15731/2014ல் வழக்கு தொடர்ந்துள்ளார். இதற்கு நகராட்சி சார்பில் எதிர் வழக்காட 13.01.2015ம் தேதி நகர் மன்றத்தில் அனுமதி பெற்றும் வழக்கில் நகராட்சி சார்பில் வழக்கறிஞர் ஆஜராக ஆணையாளர் எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை. இதனால் உயர்நீதி மன்ற மதுரைக் கிளையில் திரு. டி. சரவணன், த/பெ. திரு. திரவியம் அவர்களின், கட்டிடத்தை ஒப்படைக்க கோரியதை முகாந்திரமிருந்தால் பரிசீலிக்ககோரி உத்திரவிடப்பட்டுள்ளது. வழக்கில் நகராட்சி சார்பில் ஆஜராகவும் மொத்த செலவினத்திற்கும் மன்றத்தில் அனுமதி பெற்ற ஆணையாளர் வழக்கில் ஆஜராக எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை. முறைகேடான சட்டத்திற்கு புறம்பான நடவடிக்கைகளின் மூலம் அரசு சொத்தை நகராட்சிக்கு பயன்படக்கூடிய, பயன்பட்டுவரும் கட்டிடத்தை தனியாருக்கு தாரைவார்க்க காரணமாக இருந்துள்ளார். மேலும், தற்பொழுது ஆணையாளரின் ஆலோசனையின் பேரில் கட்டிடத்தை ஏலம் எடுத்த திரு. டி. சரவணன்,

த/பெ. திரு. திரவியம் என்பவரை, உயர் நீதிமன்ற மதுரை கிளை ஆணையாளருக்கு பரிசீலிக்க உத்தரவிட்டதை பரிசீலிக்காததால் மீண்டும் ஆணையாளர் மீது நீதிமன்ற அவதிப்பு வழக்கு போட ஆணையாளர் ஆலோசனை வழங்கியுள்ளார்.

(7) ரூ.5 கோடிக்கும் மேலான நிலமதிப்பு மிக்க இடத்தில் உள்ள கட்டிடத்தை முழுவதும் மிகக் குறைந்த வாடகையில் தாரைவார்க்க ஆணையாளரே முயல்கிறார். நகராட்சிக்கு அலுவலகம் உள்ள இடம் புதிய பேருந்து நிலையம் மற்றும் பழைய பேருந்து நிலையம், சந்தைப்பேட்டை இடம் தவிர வேறு இடமே இல்லை அப்படியிருக்கையில் 6 செண்ட் பரப்பளவு உள்ள இந்த இடத்தை தனியாருக்கு ஏலம் விட வேண்டியதில்லை. ஆகவே மேற்கண்ட சட்டவிரோத நடவடிக்கைகள் குறித்து ஆய்வு செய்து கடும் நடவடிக்கை எடுக்க வேண்டுமாறு, மனுதாரரால் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.

மேற்படி கோரிக்கைகளடங்கிய மனு மீதான பத்தி வாரியான அறிக்கையினை அனுப்பி வைக்குமாறு இராமநாதபுரம் நகராட்சி ஆணையருக்கு இம்முறைமன்ற நடுவத்தால் அறிவிப்பாணை (ந.க.எண்.அ1/0121/2015 நாள்:22.07.2015) அனுப்பி வைக்கப்பட்டது. அறிக்கை வரப்பெறாத நிலையில் 16.03.2016 அன்று விசாரணைக்கு ஆஜராகுமாறு அழைப்பாணை (அ.ம.எண் 121/2015 நாள்:15.02.2016) நகராட்சி ஆணையருக்கு அனுப்பப்பட்டது. அதன்படி 16.03.2016 அன்று இராமநாதபுரம் நகராட்சி ஆணையர் இம்முறைமன்ற நடுவத்தின் முன் ஆஜராகி கீழ்க்கண்டவாறான வாக்குமூலத்தை சமர்ப்பித்தார்:-

*"திரு. சுப நாகராஜன், 10வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் அனுப்பிய மனு எனக்கு தெரியும். உரிய நாட்களுக்குள் என்னால் உரிய பதிலை சமர்ப்பிக்க இயலவில்லை. இதற்கு அலுவலகத்தில் உள்ள சில நிர்வாக குறைபாடுகளே காரணம். இந்த தீர்மானம் நிறைவேற்றப்படும் போது நான் நகராட்சியினுடைய ஆணையராக இல்லை. நான் 1.10.2013 முதல் நகர மன்ற ஆணையாளராக உள்ளேன். அலுவலக குறிப்பின்படி தீர்மானம் அனுமதிக்கப்பட்டுள்ளது. 17.8.2012 முதல் 17.2.2013–யிலான தீர்மானம் காலாவதி ஆகிவிட்டது என்பது சட்டப்படி சரியல்ல. சுமார் 7 மாதங்கள் கழித்து ஏற்கனவே அனுமதிக்கப்பட்ட தீர்மானத்தை நடைமுறைபடுத்தாமல் காலதாமதம் செய்தது அப்போதைய ஆணையாளர் திரு. முஜீபர் ரகுமான் ஆகும். அவர் தற்போது காஞ்சிபுரம் நகராட்சி சிறப்பு ஆணையாளராக உள்ளார். அதற்குபின்பு சம்பந்தப்பட்ட ஆணையாளர் மாறுதல் செய்யப்பட்டபின்பு அப்போது நகராட்சி பொறியாளரே ஆணையாளர் பொறுப்பிலிருந்த போது மீண்டும் ஒப்பந்தப்புள்ளிகோரி பொது ஏலம் என அறிவிக்கப்பட்டது.*

பத்திரிகைகளில் விளம்பரம் செய்யாமல் ஒப்பந்தம் ரகசியமாக விடப்பட்டது என்பது சரியல்ல. பத்திரிகைகளில் விளம்பரம் செய்யப்பட்டுள்ளது. அதனுடைய நகல் இத்துடன் சமர்ப்பித்துள்ளேன். இதில் இரண்டு நபர்கள் ஏலத்தில் கலந்துகொண்டு உயர்ந்தபட்ச ஏலம் கேட்ட திரு.சரவணன் என்பவருக்கு குத்தகை முடிவுசெய்யப்பட்டது. மூன்றாண்டு காலத்திற்கு மட்டுமே குத்தகைக்கு விடப்பட்டது. பொதுப்பணிதுறையிடம் கட்டத்தின் மதிப்பை பெறவேண்டும். அடி நிலத்தை பொறுத்தவரையில் சார்-பதிவாளர் அவர்களிடம் அறிக்கை பெற்று தீர்மானம் செய்யப்பட வேண்டும். இந்த குத்தகை ஏலத்தை பொறுத்தவரை சார்பதிவாளரிடமோ சம்பந்தப்பட்ட பொதுப்பணி துறையிடமிருந்தோ இதுகுறித்து அறிக்கை பெறவில்லை. இதற்கு பொறுப்பானவர் அப்போதைய ஆணையாளராக இருந்த திரு.மதிவாணன் ஆவர். அவர் 2014ல் காலமாகிவிட்டார். இதற்குரிய நடைமுறைகளை முறையாக தயார் செய்து ஆணையரின் ஒப்புதலுக்கு வைக்கவேண்டிய முழு பொறுப்பு நகராட்சி வருவாய்துறை சார்ந்தது ஆகும். அப்போது வருவாய்துறையில் இளநிலை உதவியாளராக இருந்த திரு.பத்மநாபன் தற்போது கீழக்கரை நகராட்சியில் இளநிலை உதவியாளராக உள்ளார். திரு.சந்திரசேகர் என்பவர் அப்போது வருவாய் ஆய்வாளராக இருந்தார். அதன்பின்பு தேவக்கோட்டை நகராட்சி உதவியாளராக மாற்றப்பட்டுள்ளார். சம்பந்தப்பட்ட கோப்புகளை ஆய்வு செய்யும்பொழுது நேரடியாக ஒப்பந்தபுள்ளி கோரி வழக்கமாக விதிகளின் படி கடைபிடிக்கவேண்டிய நடைமுறைகள் ஏதும் கடைபிடிக்கப்படவில்லை. 4.4.2013 முதல் 5.6.2013 ஆகிய தேதிகளுக்கு இடையில் சில பிரச்சனைகள் தென்காசி நகராட்சிக்கு திரு.முஜிப்புர் ரகுமான் மாறுதலில் சென்றுவிட்டார். 5.6.2013 அன்று பொது ஏலத்தில் 2 நபர்கள் கலந்துகொண்டார்கள். 2 நபர்கள் கலந்துகொண்ட விவரம் மன்ற பொருளில் உள்ளது. எனவே இந்த குற்றச்சாட்டு தவறானதாகும். 29.05.2015 அன்று கட்டிட ஒப்படைப்பு சம்பந்தமாக மனுதாரர் உயர்நீதிமன்ற மதுரை கிளையில் கட்டிட ஒப்படைப்பது குறித்து ஆணையாளர் மீது வழக்கு தொடுக்கும்போது ஆணையாளராக நான்தான் இருந்தேன். மேல்முறையீடு என்னால் முறையாக செய்யப்பட்டது. அதற்குரிய ஆவணங்களை தாக்கல் செய்கிறேன் என தெரிவித்துக்கொள்கிறேன்.

திரும்பவும் நீதிமன்ற வழக்கு தொடர நான் எந்தவித ஆலோசனையும் வழங்கவில்லை. 18.06.2015 அன்று ஏலதாரரிடம் ஒப்படைக்கப்பட்டது. வேறு எந்தவித உள்நோக்கமும் என்பது எதுவுமில்லை."

மேலும், நகராட்சி ஆணையர், தனது அறிக்கையையும் (ந.க.எண்.2483/2014/எப்.2 நாள்:14.03.2016) சமர்ப்பித்தார். மேற்படி அறிக்கையில் கீழ்க்கண்டவாறான விளக்கங்கள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.

"இந்நகராட்சிக்கு சொந்தமான கிடாய்வெட்டி ஊரணி மேற்கு பகுதியில் ஆட்டி சாலையாக இயங்கி வந்த கட்டிடத்திற்கு பதிலாக அரசின் மான்யத்துடன் வாரச்சந்தையின் உட்பகுதியில் புதிதாக நவீன ஆட்டி சாலை கட்டப்பட்டு மேற்படி ஆட்டி சாலை பயன்பாட்டிற்கு கொண்டுவரப்பட்டது. எனவே பழைய ஆட்டி சாலையை வேறு பயன்பாட்டிற்கு கொண்டு வர இந்நகர் மன்ற தீர்மான எண்.146 நாள். 17.08.2012ல் இக்கட்டிடத்தை பொது ஏலத்திற்கு கொண்டு வர தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

மேற்படி தீர்மானத்தின்படி அக்கட்டித்தை பொது ஏல அறிவிப்பு மற்றும் ஒப்பந்தபுள்ளிகள் கோரி தினசரி நாளிதழில் ஏல அறிவிப்பு 15.03.2013 மற்றும் 20.05.2013ல் வெளியிடப்பட்டது. அதன் நகல் இணைக்கப்பட்டுள்ளது.

பழைய ஆட்டி சாலை கட்டிடத்தை 05.06.2013ம் தேதியில் பொது ஏலம் மற்றும் ஒப்பந்தபுள்ளி அறிவிப்பு கோரியதில் கீழ்க்கண்டவாறு இரண்டு நபர்கள் ஏலத்தில் கலந்து கொண்டனர்.

| வ. எண். | ஒப்பந்ததாரர் பெயர் மற்றும் முகவரி | உச்சக்பட்ச ஏலம் கோரிய தொகை |
|---|---|---|
| 1. | திரு. டி. சரவணன்,<br>த/பெ. திரவியம்,<br>தேவிப்பட்டிணம் ரோடு,<br>இராமநாதபுரம். | ரூ.10,700/- |
| 2. | திரு. டி. கோவிந்தராஜன்,<br>த/பெ திரவியம்<br>தேவிப்பட்டிணம் ரோடு,<br>இராமநாதபுரம். | ரூ.10,675/- |

மேற்படி இரண்டு நபர்கள் பொது ஏலத்தில் கலந்து கொண்டதில் திரு. டி. சரவணன், த/பெ திரவியம் என்பவர் மாதம் ஒன்றிற்கு ரூ.10,700/- கோரியதை மன்றத்தின் பார்வைக்கும் பரிசீலனைக்கும் வைத்ததில் திரு. டி. சரவணன், த/பெ. திரவியம் என்பவரின் உச்சபட்ச ஏலக் கேள்வி

தொகை ரூ.10,700/-ஐ இந்நகர் மன்றம் தனது தீர்மானம் எண்.364, நாள்:24.07.2013ல் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது.

மேலும் சந்தைப் பேட்டையில் ஆட்டி சாலையின் வடபுறத்தில் புதிதாக நாய்கள் தங்குமிடம் மற்றும் ஆறு அவசர சிகிச்சை யூனிட் கட்டி முடிக்கப்பட்டு பயன்பாட்டிற்கு வரும் நாளிலிருந்து கட்டிடத்தை ஏலதாரரிடம் ஒப்படைக்க மன்றத் தீர்மான எண்.364, நாள்:24.07.2013ல் தீர்மானிக்கப்பட்டுள்ளது. இக்கட்டிடம் 29.05.2015ல் கட்டி முடிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் திரு. டி. சரவணன், த/பெ. திரவியம் என்பவர் உயர்நீதிமன்ற மதுரைக்கிளை வழக்கு எண்.WP(MD) எண்.15731/2014ல் நாள்:29.02.2014ல் இக்கட்டிடத்தை ஒப்படைக்க கோரி வழக்கு தொடுத்தார்.

இவ்வழக்கில் 02.02.2015ல் மூன்று வாரத்திற்குள் கட்டிடத்தை ஒப்படைக் கோரி தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது. இந்நிலையில் திரு. சுப. நாகராஜன், 10வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் மேற்படி கட்டிடத்தை ஒப்படைப்பு சம்பந்தமாக சென்னை உயர்நீதிமன்றம் மதுரை கிளையில் எண்.WP(MD) எண்.4122/2015ல் வழக்கு தொடுத்ததில் மேற்படி வழக்கு தள்ளுபடி செய்து தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

இக்கட்டிடத்தை ஒப்படைப்பது குறித்து அரசு கூடுதல் வழக்கறிஞர், மதுரை சட்ட கருத்துரு கோரியதில் இக்கட்டிடம் இவ்வலுவலக ந.க.எண்.2483/2014/எப்2, நாள் 18.06.2015ல் திரு. டி. சரவணன் என்பவருக்கு உத்தரவு வழங்கப்பட்டது. இதில் மனுதாரர் தெரிவித்தபடி நகர்மன்ற தீர்மானத்தில் எதிர்ப்புகள் பதிவு செய்யாமல் தீர்மானிக்கப்பட்டது என நகர்மன்ற உறுப்பினர் கூறும் கூற்று முற்றிலும் தவறானது. நகர்மன்றத் தீர்மானம் நிறைவேற்றப்பட்ட 6 மாதத்திற்கு மேல் காலாவதியாகிவிடும் என்ற கூற்று நகராட்சி சட்ட விதிகளில் இது குறித்து எந்த வித தகவலும் தெரிவிக்கப்படவில்லை.

மேலும் மனுதாரர் கூறுவது போல் இல்லாது ஏலம் மற்றும் குத்தகை அறிவிப்பு தினசரி நாளிதழில் வெளியிடப்பட்டு நகராட்சி சட்ட விதிகளின்படி ஏலம் நடத்தப்பட்டது.

மேற்கண்ட ஆட்டி சாலைக் கட்டிடம் கட்டப்பட்டு பல ஆண்டுகள் ஆகிவிட்டபடியாலும் பழைய கட்டிடமாக இருந்ததாலும், அப்போதைய நகராட்சி பொறியாளர் மற்றும் ஆணையர் (பொறுப்பு) அவர்களால், வாடகை நிர்ணயம் செய்து அதன் அடிப்படையில் ஒப்பந்தப்புள்ளி மற்றும் ஏலம் நடத்தப்பட்டுள்ளது. இதில் விதி மீறல் ஏதும் இல்லை. நாய்கள் அறுவை சிகிச்சை கூடம் கட்டி

முடிக்கப்பட்டுள்ளதாலும் அரசு கூடுதல் வழக்கறிஞர் அவர்களின் சட்ட கருத்துருவின் பேரிலும் பழைய ஆட்டி சாலை கட்டிடம் ஏலம் எடுத்த நபரிடம் ஒப்படைக்கப்பட்டது.

குத்தகைதாரர் நாளது தேதிவரை வாடகையை நிலுவையின்றி செலுத்தி வருகின்றார் என்ற விபரத்தை பணிவுடன் தெரிவித்துக் கொள்கிறேன்." என தெரிவித்தார்.

இதனைத் தொடர்ந்து திரு. பத்மநாபன், இளநிலை உதவியாளர் திரு. சந்திரசேகர், உதவியாளர் ஆகிய இருவரையும் 12.04.2016 அன்று முறைமன்ற நடுவ விசாரணைக்கு ஆஜராகுமாறு தெரிவித்து அழைப்பாணைகள் (அ.ம.எண்.121/ந/2015 நாள்:18.032016) அனுப்பப்பட்டன.

மனுதாரரிடமிருந்து வரப்பெற்ற 15.03.2016 நாளிட்ட பிறிதொரு மனுவில் பொது ஏலத்தில் கலந்து கொண்ட 2-வது நபர் பொது ஏல நிபந்தனைகளின்படி ஏல காப்புத் தொகை, கூடுதல் ஏல காப்புத் தொகை செலுத்தியுள்ளது குறித்து ஆய்வு செய்யுமாறு கோரிக்கை விடுத்துள்ளார். இது குறித்து நகராட்சியின் தொடர்புடைய கோப்பிலிருந்து எடுக்கப்பட்ட விவரங்களின்படி ஏலத்தில் கலந்து கொண்ட பிறிதொரு நபர் திரு. T. கோவிந்தராஜன் என்பவர் காப்புத் தொகை மற்றும் கூடுதல் காப்புத் தொகையாக ரூ.2 இலட்சத்தை யூனியன் வங்கியின் வங்கி வரைவு எண்.373081 நாள்:3.06.2013 மூலம் செலுத்தியுள்ளதாக தெரிய வந்துள்ளது.

12.04.2016 அன்று விசாரணைக்கு ஆஜரான திரு. மு. பத்மநாபன், உதவியாளர் என்பவர் தான் 11.09.2015 வரை இராமநாதபுரம் நகராட்சியில் பணி புரிந்ததாகவும், கிடாய் வெட்டி ஊரணியில் ஆட்டி சாலையை குத்தகை விடுவது தொடர்பான கோப்பில் குத்தகை விடுவதற்கான முன் அனுமதி பெறப்பட்ட போதும், குத்தகை கோரப்படும் போதும், முடிவு செய்யப்படும்போதும் இராமநாதபுரம் நகராட்சியில் தான் இளநிலை உதவியாளராக அந்த இருக்கை பொறுப்பிலில்லை எனத் தெரிவித்தார். திரு. ஆனந்த விஸ்வாசம், (இ.நி.உ.) என்பவரே குத்தகை ஒப்படைப்பு செய்யப்படும் போதும், தற்போது வரை அந்த இருக்கை பொறுப்பில் உள்ளார் என்றும் விசாரணையின் போது காண்பிக்கப்பட்ட குறிப்புக் கோப்பிலுள்ள கையெழுத்து தன்னுடையதல்ல எனவும் மேற்சொன்ன பணியாளரது கையெழுத்தாகும் எனவும் தெரிவித்தார்.

அதனைத் தொடர்ந்து திரு. சந்திரசேகர் உதவியாளர், திரு. தமிழ்செல்வன், வருவாய் ஆய்வாளர் மற்றும் திரு. ஆனந்த விஸ்வாசம், இ.நி.உ. ஆகிய மூவரும் 15.06.2016 அன்று விசாரணைக்கு ஆஜராகிடுமாறு அழைப்பாணை (அ.ம.எண்.121/2015/ந நாள்:22.04.2016) அனுப்பப்பட்டது.

முறையீட்டு மனுதாரரை 30.05.2016 அன்று விசாரணைக்கு ஆஜராகுமாறு தெரிவித்தும், 2015-ஆம் ஆண்டு, தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் (முறையீடுகள் தாக்கல், விசாரணை மற்றும் தீர்வு செய்யப்படுதல் முறைகள்) விதிகளில், விதி–4ன்படி, நிர்ணயிக்கப்பட்டுள்ள உரிய படிவத்தில் விதி 6-ன்படி ரூ.10/-க்கான நீதிமன்ற வில்லையுடன் முறையீட்டினை முறையாக அனுப்பி வைக்குமாறு தெரிவித்தும் அறிவிப்பாணை அசல் மனு எண்.0121/2015/ந நாள்:10.05.2016 அனுப்பி வைக்கப்பட்டது.

முறையீட்டு மனுதாரர் 30.05.2016 விசாரணைக்கு ஆஜராக தவறிய நிலையிலும், மேற்கண்டவாறு விதிகளுக்கிணங்க முறையீட்டினை தாக்கல் செய்யத் தவறிய போதும், கூடுதல் வாய்ப்பளித்து 03.08.2016 அன்று மறு விசாரணை நாள் நிர்ணயிக்கப்பட்டு, முறையீட்டு மனுவினை மேற்குறிப்பிட்டவாறு உரிய முறையில் விதிகளின்படி தாக்கல் செய்யுமாறு மீள வலியுறுத்தி அறிவிப்பாணை (அசல் மனு எண்.0121/2015/ந நாள்:01.06.2016) மீள அனுப்பி வைக்கப்பட்டது.

15.06.2016 அன்று நிர்ணயிக்கப்பட்டிருந்து நகராட்சி பணியாளர்களுக்கான விசாரணை 03.08.2016க்கு ஒத்திவைக்கப்பட்டு அழைப்பாணை (அ.ம.எண்.121/15/ந நாள்:13.06.2016) அனுப்பப்பட்டது.

03.08.2016 அன்று விசாரணைக்கு ஆஜரான திரு. M. ஆனந்தவிசுவாசம், இ.நி.உ. தான் மேற்படி குத்தகை ஏலம் தொடர்பான இருக்கை எழுத்தராக இல்லை எனவும் திரு. பத்மநாபன் என்பவரே மேற்படி இருக்கை எழுத்தராகவும் நகர்மன்ற எழுத்தராகவும் இருந்தார் என்றும் காண்பிக்கப்பட்ட நகராட்சியின் குறிப்புக் கோப்பிலுள்ள கையெழுத்து அவருடையதே ஆகுமெனவும் உறுதிபட தெரிவித்தார்.

அவருக்குப்பின் விசாரணைக்கு அழைக்கப்பட்ட திரு. T. தமிழ்செல்வன், வருவாய் ஆய்வாளர் மேற்படி குத்தகை ஏலம் தொடர்பான கோப்பு இ.நி.உ. திரு. பத்மநாபன், மேலாளர் மற்றும் நகராட்சி ஆணையர் நடவடிக்கைகளுக்குட்பட்டே இருந்ததெனவும் 29.06.2015ல் வருவாய் ஆய்வர் என்ற முறையில் குத்தகை உரிமத் தொகை வசூல் செய்ய உத்தரவு நகல் மட்டும் தனக்கு வழங்கப்பட்டதெனவும் அதன்படி மாதந்தோறும் குத்தகை உரிமத்தொகை மட்டுமே தான் வசூலித்து வருவதாகவும் தெரிவித்தார். அதன்பின்னர் ஆஜரான முன்னாள் வருவாய் ஆய்வாளர் திரு. எஸ். சந்திரசேகரன் என்பவர் ஏலம் நடத்தும் கோப்பில் அப்போதைய குத்தகை எழுத்தர் திரு. M. பத்மநாபன், மேலாளர் திருமதி. எஸ். என். சியாமளா மற்றும் பொறியாளர் மற்றும் ஆணையர் (பொ) திரு. ஆ. மதிவாணன் ஆகியவர்கள் மட்டுமே நடவடிக்கைகள் மேற்கொண்டனர் என்றும் கடை ஏலம் விடுவதற்கு பொதுப் பணித்துறை அலுவலக பொறியாளரிடம் வாடகை நிர்ணயம் செய்வதற்கு கணக்கீட்டுப்படிவம் தயார் செய்து அதில் மாத வாடகை நிர்ணயம் செய்து அரசு மதிப்பாக

வைத்து ஏலம் நடத்தப்பட வேண்டுமெனவும் வருவாய் ஆய்வரின் குறிப்பு பெறப்பட வேண்டுமென தான் தெரிவித்தாகவும், அவசியமில்லை என அப்போதைய நகராட்சி ஆணையர் (பொ) மற்றும் நகராட்சி பொறியாளர் தெரிவித்ததாகவும் கூறினார்.

இதனைத் தொடர்ந்து திரு. M.ஆனந்த விசுவாசம், இநி.உ. இராமநாதபுரம் நகராட்சி என்பவர் 06.09.2016 தேதியிட்டு அனுப்பி வைத்த தனது கூடுதல் வாக்குமூலத்தில் ஏலப் பதிவேட்டின் நகலில் இநி.உ. திரு. M. பத்மநாபன் என்பவர் ஏலப் பதிவேட்டில் ஏலத்தில் கலந்து கொண்ட நபர்களின் பெயர்களை பதிவு செய்து சுருக்கொப்பமிடாமல் ஏலதாரரிடமும், ஆணையாளரிடமும் கையொப்பங்கள் பெற்றுள்ளாரெனவும் அவர் தான் நகர்மன்ற எழுத்தராகவும் மற்றும் குத்தகை எழுத்தராகவும் பணியாற்றியுள்ளார் என அலுவலக ஆணை மூலமும் நிருபிக்கப்பட்டதெனவும் குறிப்பிட்டுள்ளார்.

அதன் பின்னர் 09.09.2016 அன்று விசாரணைக்கு அழைக்கப்பட்டிருந்த இராமநாதபுரம் நகராட்சி மேலாளர் திருமதி. சியாமளா மற்றும் திரு. M. பத்மநாபன், வருவாய் ஆய்வாளர் ஆகியோர் கீழ்க்கண்டவாறு வாக்குமூலங்கள் சமர்ப்பித்துள்ளனர்:-

<u>திருமதி. சியாமளா அளித்த வாக்குமூலம்:</u>

*"நான் இராமநாதபுரம் மேலாளராக 31.08.2013 முதல் பணிபுரிந்து வருகிறேன். வழக்கில் உள்ள ஒப்பந்த விசயங்களின் நிகழ்வுகள் நடக்கும் போது நான் மேலாளராக இல்லை. அருப்புக் கோட்டை நகராட்சியில் கணக்கராக பணிபுரிந்தேன். இந்த நிகழ்வுகள் நடக்கும் போது திரு. ஆறுமுகம் – மேலாளர் மற்றும் திருமதி. காளியம்மாள் – உதவியாளர் மற்றும் மேலாளர் கூடுதல் பொறுப்பு வகித்தார்கள்.*

*திரு. ஆறுமுகம் புதுக்கோட்டை நகராட்சியில் மேலாளராக பணிபுரிகிறார். திருமதி காளியம்மாள் ஸ்ரீவில்லிபுத்தூர் நகராட்சியில் கணக்கராக பணிபுரிந்து வருகிறார். இந்த டெண்டர் விசயமாக ஏலம் எடுத்தவர் திரு. சரவணன் ஓராண்டுக்கு மேலாகியும் உரிய ஆணைகள் வழங்கப்படவில்லை என சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையில் வழக்கு தொடர்ந்தார். 24.03.2015-ல் உயர் நீதிமன்ற கிளையில் தனது தீர்ப்பில் மனுதாரர் நகர் மன்ற உறுப்பினர், நகர் மன்றத்திலேயே கோரிக்கை எழுப்புவதற்கு உரிய வாய்ப்பு இருந்தும் அதை பயன்படுத்தாமல் எந்த ஆதாரமும் இன்றி வழக்கு தொடர்ந்து உள்ளார். இந்நிலையில் நகராட்சி நிர்வாக கொள்கை முடிவுகளில் உயர்நீதிமன்றம் தலையிடாது. அவரது கோரிக்கையை நகர் மன்றத்தில் தனக்குள்ள உரிமையை பயன்படுத்தி தெரிவிக்கலாம் என கூறப்பட்டது. மேலும், அதற்கு மேல் அவர் விரும்பினால் முறைகேடுகளை உரியவாறு*

விலக்கி மாவட்ட ஆட்சித் தலைவருக்கு முறையிட்டு பரிகாரம் தேடிக்கொள்ளலாம் என ஆணையிடப்பட்டது. மாவட்ட ஆட்சித் தலைவருக்கு நீதி மன்ற ஆணையின்படி முறையீடு செய்தாரா என்ற விவரம் எனக்குத் தெரியவில்லை.

அதற்கு பின்பு நீதிமன்ற ஆணையில் மனுதாரரின் மனுவை பரிசீலனை செய்து கூடுதல் அரசு வழக்குரைஞர் திரு. முருகானந்தம் என்பவரிடம் கருத்து பெற்று அவரது கருத்தின் படி ஏலதாரருக்கு உரிய ஆணை வழங்கப்பட்டது. தற்போது நீதிமன்றத்தில் எந்த வழக்கும் இல்லை. திரு.சந்திரசேகர் அளித்த வாக்குமூலத்தில் ஏலம் போடும் போது நான்தான் இருந்தேன். நான் தான் கையெழுத்து போட்டேன் என்று சொன்னால் அது சரியானதல்ல. இரண்டு ஏலதாரர்கள் கலந்து கொண்டனர். இரண்டு ஏலதாரர்களும் 66/10 தேவிப்பட்டிணம் ரோடு ஆர். திரவியம் என்பவரின் மகன் திரு. கோவிந்தராஜன் திரு. சரவணன் ஆகியோர் ஆவர். இவர்களில் திரு. சரவணன் என்பவருக்கு ஏலம் உறுதி செய்யப்பட்டது. திரு. சரவணன் த/பெ.திரவியம் என்பவரது உச்சபட்ச ஏலத்தொகை ரூ.10,700/– உறுதி செய்து திரு.மதிவாணன் – பொறியாளர் மற்றும் ஆணையாளர் பொறுப்பு அவர்கள் ஏலப்பதிவேட்டில் கையொப்பம் செய்துள்ளார்கள். திரு.மதிவாணன் தற்போது உயிருடன் இல்லை."

<u>திரு.பத்மநாபன் (வருவாய் ஆய்வாளர்) அளித்த வாக்குமூலம்:</u>

"நான் தற்போது இராமநாதபுரம் நகராட்சியில் வருவாய் ஆய்வாளராக பணி புரிகிறேன். முறையீட்டுதாரர் திரு. நாகராஜன் ஒப்பந்தம் பெற்றது தொடர்பான நிகழ்வுகள் நடக்கும் போது இளநிலை உதவியாளராக இருந்தேன். ஏலம் எடுப்பதற்கான அறிவிப்பு முடிந்த பின்பு தான் நான் பணிக்கு வந்தேன். ஏலம் நடத்தும் போது நான் இருந்தேன். 2 பேர் ஒப்பந்தப் புள்ளியில் கலந்து கொண்டார்கள் திரு. சரவணன் என்பவருக்கு ஒப்பந்தம் உறுதியானது. நகராட்சியில் தலைவர் இறந்தவுடன் பல்வேறு வகையான டெண்டர் குறித்து பல்வேறு அதிகாரிகளுக்கு அறிவிப்பு அனுப்பப்பட்டது. எனவே ஆணை வழங்குவதில் தாமதம் ஏற்பட்டது. அப்போது ஏலம் நடத்தியவர் திரு. மதிவாணன் ஆகும், அவர் பணியில் இருந்தவரை ஒப்பந்தத்தை இறுதி செய்யவில்லை. அதற்கு பிறகு ஒப்பந்தம் எடுத்தவர் சென்னை உயர் நீதிமன்றம் (W.P.No.15731/2014) 02.02.2015. இது குறித்து சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையில் மூன்று வார காலத்திற்குள் மனுவை விதிகளின் படி விசாரித்து உரிய ஆணைகள் இட உயர் நீதிமன்றம்

ஆணையிட்டது. உடனடியாக 18.06.2015–ல் முகமது சிராஜ் நகராட்சி ஆணையராக இருந்தது ஏலதாரருக்கு அனுபவித்து கொள்ளும் உரிமை வழங்கி ஆணையிட்டார்கள். அவர் தற்போது குன்னூர் நகராட்சி ஆணையராக இருக்கிறார். ரூ.10.700/- என தீர்மானித்து ஆணையிடப்பட்டது. தற்போதைய முறையீட்டாளர் திரு. நாகராஜன் (நகராட்சி மன்ற உறுப்பினர்) அவர் மதுரைக் கிளையில் பொது நல வழக்கு ஒன்று கொடுத்தார் W.P.எண் 4122/2015, 24.03.2015 –ல் உயர் நீதிமன்ற கிளையில் தனது தீர்ப்பில் மனுதாரர் நகர் மன்ற உறுப்பினர் நகர் மன்றத்திலேயே கோரிக்கை எழுப்பவது உரிய வாய்ப்பு இருந்தும் அதை பயன்படுத்தாமல் எந்த ஆதாரமும் இன்றி வழக்கு தொடர்ந்து உள்ளார். இந்நிலையில் நகராட்சி நிர்வாக கொள்கை முடிவுகளில் உயர்நீதி மன்றம் தலையிடாது. அவரது கோரிக்கையை நகர் மன்றத்தில் தனக்குள்ள உரிமையை பயன்படுத்தி தெரிவிக்கலாம் என கூறப்பட்டது. மேலும், அதற்கு மேல் அவர் விரும்பினால் முறைகேடுகளை உரியவாறு விளக்கி மாவட்ட ஆட்சி தலைவருக்கு முறையிட்டு பரிகாரம் தேடிக்கொள்ளலாம் என ஆணையிடப்பட்டது. மாவட்ட ஆட்சித் தலைவருக்கு நீதி மன்ற முறையீடு செய்தாரா எனத் தெரியவில்லை. திரு. ஆனந்த விஸ்வாசம்–இளநிலை உதவியாளர், சந்திரசேகர் – வருவாய் ஆய்வாளர் இருவரும் சேர்ந்து கொண்டு நான் நகராட்சி தலைவருடன் இருந்து கொண்டு மற்றவர்களை மிரட்டி கையெழுத்து போடச்சொன்னேன் என்று சொன்னால் அது சரியானது அல்ல.

07.10.2014 ஆனந்த் விஸ்வாசம் – இளநிலை உதவியாளர் அவர் கோப்புகளில் கையொப்பம் இட்டு உள்ளார்."

மேற்படி ஏலமிடப்பட்ட கட்டிடத்திற்கான வாடகை மதிப்பீடு நிர்ணயம் குறித்து பொதுப் பணித் துறையின் மதிப்பீட்டு சான்று பெறப்படல் குறித்து மேற்குறிப்பிட்ட பணியாளர்கள் எவரும் சரியான விவரங்கள் சமர்ப்பிக்காத நிலையில் ஏல நடவடிக்கைகளின்போது பொறுப்பிலிருந்த அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் விவரம் இராமநாதபுரம் நகராட்சி ஆணையரிடம் கோரப்பட்டது. (அ.ம.எண்.0121/5/ந நாள்:23.09.2016) அதன்படி நகராட்சி ஆணையரது அறிக்கை ந.க.எண்.2483/2016/எப்.2 நாள்:05.10.2016ல் கீழ்க்கண்டவாறு விவரங்கள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.

| வ.எண் | அலுவலர் | பொறுப்பு – பணிக்காலம் (இராமநாதபுரம் நகராட்சியில்) |
| --- | --- | --- |
| 1. | திரு. இ. மதிவாணன், பொறியாளர் மற்றும் ஆணையர் (பொ) (இறந்து விட்டார்) | 04.05.2013 முதல் 30.09.2013 வரை |
| 2. | திரு. சொ. ஆறுமுகம் மேலாளர் புதுக்கோட்டை நகராட்சி | 31.05.2013 முதல் 22.07.2016 வரை (மேலாளர்) |
| 3. | திரு. ச. சந்திரசேகர் உதவியாளர் கீழ்க்கரை நகராட்சி | 22.07.2011 முதல் 09.01.2015 (வருவாய் ஆய்வாளர்) |
| 4. | திரு. எம். பத்மநாபன் வருவாய் ஆய்வாளர் இராமநாதபுரம் நகராட்சி | 01.06.2013 முதல் 13.06.2014 (இ.நி.உ.) |

மேலே பட்டியல் வ.எண். 4ல் குறிப்பிட்டுள்ள பணியாளர் திரு. எம். பத்மநாபன், வருவாய் ஆய்வாளர் இரண்டு முறை விசாரணைக்கு அழைக்கப்பட்டு ஆஜரானபோதும் தனது பொறுப்பினை தட்டிக் கழிக்கும் வகையில் தவறான தகவல்களையே சமர்ப்பித்துள்ளார். அவரது செயல் கண்டிக்கத்தக்கதும், கண்டனத்துக்குரியதுமாகும்.

முறையீட்டு மனுதாரரால் தொடரப்பட்ட வழக்கில் மாண்பமை சென்னை உயர்நீதிமன்ற மதுரைக் கிளையினால் நீதிப் பேராணை W.P.(MD) எண்.4122/2015 மற்றும் M.P. (MD) எண்.1/2015- நாள்:24.03.2015ல் அளிக்கப்பட்டுள்ள தீர்ப்புகளின்படி, ஏல முறைகேடுகள் தொடர்பாக முறையீட்டு மனுதாரர் மாவட்ட ஆட்சித் தலைவரிடம் முறையீடு ஏதும் தாக்கல் செய்துள்ளாரா என்பது குறித்து விவரம் கோரப்பட்டது. அதன்படி இராமநாதபுரம் நகராட்சி ஆணையரது அறிக்கை ந.க.எண்.2482/2014 எப்.2 நாள்:27.12.2016ல் மேற்குறிப்பிட்ட நீதிமன்ற தீர்ப்புகளின்படி முறையீட்டு மனுதாரரால் இராமநாதபுரம் மாவட்ட ஆட்சித் தலைவரிடம் முறையீடு ஏதும் செய்யப்படவில்லை என தெரிவிக்கப்பட்டுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

இதனிடையே முறையீட்டு மனுதாரரிடமிருந்து வரப்பெற்ற 04.12.2016 நாளிட்ட விளக்கக் கடிதம் மற்றும் அறிவுறுத்தப்பட்டவாறு விதிகளின்படி முறையான படிவத்தில், நீதிமன்ற வில்லையுடன் தாக்கல் செய்யப்பட்ட முறையீட்டு மனுவையும் கருதி 30.01.2017 அன்று விளக்கம் அளிக்குமாறு அழைக்கப்பட்டார். அதன்படி முறையீட்டு மனுதாரர் 30.01.2017 அன்று ஆஜராகி கீழ்க்கண்டவாறான தனது வாக்குமூலத்தினை சமர்ப்பித்துள்ளார்:-

"நான் 1996ம் ஆண்டு முதல் தொடர்ந்து நகர்மன்ற உறுப்பினராக உள்ளேன். நான் உள்ளாட்சி அமைப்புகளின் முறைமன்ற நடுவத்திற்கு 04.12.2016 நாளிட்டு அனுப்பப்பட்ட மனு என்னால்தான் அனுப்பப்பட்டது எனத் தெரிவித்துக்-கொள்கிறேன். எனது முறையீட்டில் இராமநாதபுரம் நகராட்சிக்கு சொந்தமான ஆட்டி சாலை கட்டிடத்தை ஒருநபர் மட்டும் ஏலத்தில் எடுக்கப்பட்டு அதை மன்றமும் அனுமதித்துள்ளது. மறு ஏலத்தில் இரண்டு நபர்கள் கலந்து கொண்டதாகவும் திரு. சரவணன் என்பவருக்கு ரூ.10,700/-க்கான ஏலத்தை அனுமதிக்கலாம் எனவும் மன்றத்தீர்மானத்தில் அனுமதித்துள்ளார்கள். ஒருநபர் ஏலத்தை அனுமதிக்க சட்டத்தில் அனுமதியில்லை. இருந்தும் மாவட்ட ஆட்சியர் அவர்களுக்கு 10.06.2013,30.07.2013, 07.08.2013 29.08.2013 28.09.2013 06.11.2013,18.11.2013, 24.02.2014, 23.06.2014, 26.06.2014, 13.9.2015 ஆகிய நாட்களில் பதிவு தபாலில் அனுப்பியிருந்தேன். 27.03.2016ல் இணையதளம் மூலமாகவும் புகார் செய்துள்ளேன். சென்னை உயர்நீதிமன்ற மதுரைக்கிளையில் வழக்கு தொடர்ந்தேன். வழக்கின் தீர்ப்பில் மாவட்ட ஆட்சித்தலைவருக்கு ஆணையிட்டுள்ளார்கள். அதில் நகராட்சி சட்டத்திற்கு புறம்பாக செயல்பட்டிருந்தால் அதன் மீது நடவடிக்கை எடுக்குமாறு உத்தரவிடப்பட்டுள்ளது. தற்பொழுது அந்த ஆட்டி சாலை திரு. சரவணன் த/பெ. திரவியம் என்பவரால் எடுக்கப்பட்டு அவரின் சொந்த வியாபாரத்தினை அந்த இடத்தில் நடத்திவருகிறார். அந்த கட்டிடத்தை நகராட்சியினுடைய அனுமதியின்றி அவர் இஷ்டத்திற்கு அவர் தொழிலுக்கு வசதியாக மாற்றியமைத்துக் கொண்டார். திரு. சரவணன் த/பெ திரவியத்திற்கு வழங்கப்பட்டது சட்டத்திற்கு புறம்பானதாகும். மன்ற அனுமதியுடன் மூன்று பிரபல பத்திரிக்கையில் டெண்டர் அறிவிப்பு செய்யவேண்டும். இதற்கு முன்பு பத்திரிக்கையில் பொது ஏலத்தில் விடுவதை அறிவிப்பு செய்யவேண்டும். பத்திரிகை விளம்பரம் செய்வதற்கு ஏற்படும் செலவிற்கு மன்ற ஒப்புதல் பெறப்படவேண்டும். அவ்வாறு மன்ற ஒப்புதலின்றி நகராட்சி ஆணையாளர் நகர்மன்றத்தினுடைய பணத்தை செலவு செய்துள்ளார். அப்போதைய ஆணையர் திரு முஜ்பூர் ரஹ்மான் ஆவார். 04.04.2013-ல் திரு மதிவாணன் நகராட்சி பொறியாளர் நகராட்சி ஆணையர் பொறுப்பில் இருந்தார். அவர் மறைந்துவிட்டார். மறுஏலம் 05.06.2013ல் நடந்தபோதும் திரு மதிவாணன் என்பவர்தான் பொறுப்பில் இருந்தார். மேற்படி டெண்டர் முடிந்து உரிய ஆணைகள் வழங்ககூடாதென என்னுடன் இரண்டு கவுன்சிலர்களும் சேர்ந்து நாங்கள் புகார் செய்தோம். ஒப்பந்ததாரர் திரு. சரவணன் த/பெ திரவியம் சென்னை உயர்நீதிமன்றத்திற்கு செல்வதற்கு தகுதியில்லாமல் இருந்தும் வழக்கு தொடர்ந்தார்.

நீதிமன்றம் தனது தீர்ப்பில் மனுதாரரது கட்டிடத்தை ஒப்படைத்திடக் கோரும் கோரிக்கையில் உரிய முகாந்திரம் இருந்தால் நடவடிக்கை எடுக்க நகராட்சி ஆணையருக்கு உத்தரவிட்டது. நகராட்சி தன்னை முறையாக இணைத்துக்கொண்டு வழக்கை நடத்தவில்லை. நகராட்சி ஆஜராகததால் தீர்ப்பு ஒருதரப்பு முடிவாக அறிவிக்கப்பட்டு மனுதாரரின் மனுவை பரிசீலிக்க நகராட்சி ஆணையருக்கு ஆணையிடப்பட்டுள்ளது. ஆட்டி சாலையை முறையின்றி சட்டத்திற்கு புறம்பான தீர்மானத்தின்மூலம் ஒப்பந்ததாரர் திரு. சரவணனுக்கு வழங்கியதை இரத்து செய்து நகராட்சி மீண்டும் எடுத்து நகராட்சியே பயன்படுத்தவேண்டும். திரு. சரவணன் என்பவருக்கு ஏல உரிமை ஆணைகள் வழங்கியது திரு. முகம்மது சிராஜ் ஆவார். அவர் தற்போது மாறுதலாகி (குன்னூர் நகராட்சி) சென்றுள்ளார், என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்."

முறையீட்டு மனுதாரரது கோரிக்கையினைப் பொறுத்தவரை ஏற்கனவே மாண்பமை சென்னை உயர்நீதிமன்ற மதுரைக்கிளை நீதிப் பேராணை எண்.4122/2015 மற்றும் M.P. (MD) எண்.1/2015ல் பகரப்பட்டவாறு போதிய ஆதார ஆவணங்களுடன் மாவட்ட ஆட்சித் தலைவரிடம் முறையீடு செய்து கொள்ளலாமென தீர்ப்பளிக்கப்பட்டுள்ளது. ஆனால், முறையீட்டு மனுதாரர் மேற்படி ஏல நடவடிக்கைகள் தொடர்பான கோரிக்கைகள் குறித்து இராமநாதபுரம் மாவட்ட ஆட்சித் தலைவரிடம் முறையீடு ஏதும் வரப்பெறவில்லை எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நேர்வில், மேற்படி ஏல நடவடிக்கைகளில் பொதுப் பணித்துறை மதிப்பீட்டு சான்று பெறல் போன்ற நடைமுறைகளும், விதிமுறைகளும் பின்பற்றப்படாதமைக்கு பொறுப்பான அலுவலர்களிடம் உரிய விளக்கங்கள் பெற்று தக்க நடவடிக்கைகள் மேற்கொண்டிடுமாறு நகராட்சி நிர்வாக ஆணையர், அவர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார். மேலும் திரு. பத்மநாபன் வருவாய் ஆய்வாளர் விசாரணையின் போது பொறுப்பற்ற முறையில் சாட்சியம் அளித்தமைக்காக உரிய நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

2017–ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 27–ஆம் நாளன்று என்னால் கையொப்பமிடப்பட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணையிடப்படுகிறது.

–//ஒப்பம்//––

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

7/4/2017

செயலாளர்.

7/4/17

<u>பெறுநர்</u>

1. திரு. சுப. நாகராஜன்,
11/7, முத்துராமலிங்கசாமி கோவில் மேற்கு தெரு,
வெளிப்பட்டணம்,
இராமநாதபுரம் - 623 504.

2. நகராட்சி ஆணையர்,
இராமநாதபுரம் நகராட்சி,
இராமநாதபுரம் மாவட்டம்.

3. மாவட்ட ஆட்சித் தலைவர்,
மாவட்ட ஆட்சியரகம்,
இராமநாதபுரம் மாவட்டம்.

4. நகராட்சி நிர்வாக ஆணையர்
நகராட்சி நிர்வாக ஆணையரகம்,
எழிலகம், சேப்பாக்கம், சென்னை – 600 005.